பதவி ஏற்பாடு செய்யப்பட்டது. அதிலும் கால தாமதம் ஏற்படுவதாகப் புகார் இருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து ஒரு முடிவு செய்யவேண்டி யிருக்கிறது.

SRI A.R. SUBBAIAH MUDALIAR : "டிஸ்ட்ரிக்ட் லைப்ரெரி அதாரிட்டி" யில் இந்த டி. இ. ஓ. செக்ரடரியாக இருப்பதால் அவர்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது. ஆகவே இந்த லைப்ரெரிகளுக்கு செக்ரடரியை தனியாக நியமனம் செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதில் அவ்வளவு அதிக வேலை இருக்காது என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER : கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் வேறு அலுவலாக அவசரமாக வெளியே போக வேண்டியிருப்பதால் அவருடைய கேள்விகளை முதலில் எடுத்துக் கொள்ள இந்த சபைக்கு ஆட்சேபனை இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

அவர் கேள்விகளை எடுத்துக் கொள்வோம்.

Children's Hospital

* 280 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to open a 'Children's Hospital' in the City?

THE HON. SRI M. A. MANICKAVELU : The answer is in the negative.

SRI S. PAKKIRISAMI PILLAI : குழந்தைகளுக்குத் தனி ஆஸ்பத்திரி அவசரம். அவசியம் என்று மந்திரி கருதுகிறார்களா ? இது வரை ஏற்படுத்தாதற்கு பணமின்மை என்பதால் மாத்திரம் இம்மாதிரியான பதில் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குழந்தைகளுக்கு என்று தனியாக ஒரு ஆஸ்பத்திரி இல்லை. இப்பொழுது இருக்கிற நான்கு பெரிய ஆஸ்பத்திரிகளில் குழந்தைகளுக்கு என்று ஒரு தனி டிபார்ட்டுமெண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு கூட 'பெடியாட்ரிக்ஸ் டிபார்ட்மெண்டு' என்று தனியாக ஒரு யூனிட்டை ஏற்படுத்தி குழந்தைகளுக்கும், premature குழந்தைகளுக்கும் சிகிச்சை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

* Q. -281 – 284—Vide page 550-554 *in fra.*

Water-supply

* 285 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government propose to extend the Nagercoil Municipal Water-supply to the extended area of Nagercoil Municipality; and

(b) if so, the total cost of such extension?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The question of drawing up a list of water-supply and drainage schemes to be taken up in the Kanyakumari district during the remaining period of the Second Five-Year Plan, is under consideration.